# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1689/18 - 2011 ජනවාරි 21 වැනි සිකුරාදා - 2011.01.21

*1689/18 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.- பீ. 275/41* (ii).

**(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்**

*(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 6 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரவூப் ஹக்கீம்,
*நீதி அமைச்சர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு,*
*2010, திசெம்பர் 30.*

**ஒழுங்குவிதிகள்**

*1942, யூலை 31 ஆந் திகதிய 8979 ஆம் இலக்க, வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவையுமான 1942 ஆம் ஆண்டின் கடன் இணக்க ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-*

*(1) அதன் 3 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலம் :-*

*" 3 (1) சபையின் அல்லது கிளைச் சபையொன்றின் கூட்டமொன்றுக்கு வருகைதரும் ஒரு சபை உறுப்பினருக்கு அல்லது கிளைச் சபையொன்றின் உறுப்பினருக்கு, ஒவ்வோர் அமர்வு தொடர்பிலும் ஆயிரம் ரூபாக் கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.*

*(2) சபையின் கூட்டமொன்றுக்கு வருகைதரும் சபையொன்றின் தவிசாளருக்கு ஒவ்வோர் அமர்வு தொடர்பிலும் ஆயிரத்தைநூறு ரூபா கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்." ;*

*(2) அதன் 4 ஆம் ஒழுங்குவிதியில் :-*

*(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில்* (ii) *ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் :-*

"(ii) *ஓர் உறுப்பினர் கூட்டத்துக்கு வருகைதர மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்துமிடத்து ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஐந்நூறு ரூபாவும் தவிசாளரின் விடயத்தில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் எழுநூற்றைம்பது ரூபாவும்.".*

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

(3) அவ்வொழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :-

"(2) ஓராம் பந்தியின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகைக்கு மேலதிகமாக தவிசாளருக்கும் சபையின் அல்லது கிளைச் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவர் தமது வதிவிடத்தைவிட்டு வெளியே அலுவலகக் கடமையில் ஈடுபட்டுள்ளபோது ஒன்றுதிட்டிய படியாக ஐந்நூறு ரூபா செலுத்தப்படுதல் வேண்டும்.".

(4) இதன்கண் செய்யப்பட்ட திருத்தங்கள் 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2 - 58*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.